# மொரட்டுவை பல்கலைக்கழகம் ~ இலங்கை

# வெற்றிடம்

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் வெற்றிடம் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக தேவையான தகைமைகளைக் கொண்ட அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. தொழில்நுட்ப அதிகாரி (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) தரம் III

**தேவையான தகைமைகள்**

(a) எந்த ஒரு துறையிலும் ஒரே தடவையில் க.பொ.த. (உயர் தர) பாரீட்சையில் மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

(b) தகவல் தொடர்பாடல் மற்றும் பல்லூடக தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்ப துறை அல்லது அதற்கு இணையான துறை ஒன்றில் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை 5 ஆவது தரம் (N.V.Q. Level 5) அல்லது அதற்கு குறையாத தரத்தில் தேர்ச்சி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு:-**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள முறை:** U-MT I (III) ரூபா 51,095 – 7x540; 10x640 – 60,575 (மாதாந்தம்)

06/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 02/2025(i) ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை:** எழுத்து மற்றும்/ அல்லது நடைமுறை பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை மூலம்.

## 02. பொது சுகாதார பரிசோதகர் (தரம் III)

**தேவையான தகைமைகள்**

சுகாதார திணைக்களத்தினால் நடத்தப்படும் பொது சுகாதார பரிசோதகர் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:** 45 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

**சம்பள முறை:** U-MT I (III) ரூபா 51,095 – 7x540; 10x640 – 60,575 (மாதாந்தம்)

06/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 02/2025(i) ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை:** நேர்முகப்பரீட்சை மூலம்

## 03. தொழில்நுட்ப அதிகாரி (II) தரம் "B" பிரிவு

**தேவையான தகைமைகள்**

(a) க.பொ.த. (உ.தர) பரீட்சையில் ஒரே தடவையில் 03 விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பாடக் கலவை(கள்) துறையின் பரிந்துரையின் பேரில் தொடர்புடைய பீடத்தால் முடிவு செய்யப்படும்.

**மற்றும்**

(b) பதவிக்கு தொடர்புடைய குறைந்தது ஓர் ஆண்டு முழு நேர தொழில் பயிற்சி கற்கை ஒன்றில் சித்தி பெற்றிருத்தல் அல்லது அதற்கு இணையான தகைமையை பெற்றிருத்தல். இந்தப் பதவிக்காக பயிற்சிக் கற்கை அல்லது அதற்கு இணையான தகைமை குறித்த பீடத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு:-**

ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவது (03) ஆண்டுகள் பயிற்சிக் காலத்திற்கு உட்பட்டு ''பயிற்சி பெறும் தொழில்நுட்ப அதிகாரி'' என்று நியமிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் ஆய்வுகூட தொழில்நுட்ப செயற்பாடுகள் மற்றும் அந்த வேலைகளுக்கு தொடர்புடைய பொருட்களின் கொள்வனவுக் கோரல், பொருள் கையிருப்பு பட்டியலை பேனுதல் மற்றும் ஆங்கில மொழியில் தட்டச்சு தொடர்பில் தேர்ச்சி ஒன்றை பெறுதல் வேண்டும் என்பதோடு அந்த தேர்ச்சிகளை பூர்த்தி செய்கின்ற பணியாளர்கள் பயிற்சி பெறும் காலம் முடிவுற்ற பின் பதவியில் உறுதி செய்யப்பட்ட தொழில்நுட்ப அதிகாரி II தரம் ''B'' பிரிவு பதவிக்கு நியமிக்கப்படுவார்.

**வயது:** 35 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

**சம்பள முறை:** U-MT I (III) ரூபா 51,095 – 7x540; 10x640 – 60,575 (மாதாந்தம்)

06/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 02/2025(i) ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை:** நடைமுறை பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை

## 04. ஓட்டுநர் (தரம் III)

**தேவையான தகைமைகள்**

1. க.பொ.த. (சா.தர) பரீட்சையில் குறைந்தது இரு (2) திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

2. மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களுக்கான ஓட்டுநர் அனுபதிப்பத்திரம் ஒன்று இருத்தல் மற்றும் அந்த அனுமதிப்பத்திரத்தை பெற்ற பின்னர் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் ஓட்டுநராக அனுபவம்.

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**வேறு:**

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்த ஒரு பகுதியில் பணியாற்றுவதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரரினால் அண்மையில் பெற்றுக்கொண்ட பொலிஸ் அறிக்கை ஒன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**சம்பள முறை:** U-PL 3 (III) ரூபா 48,005-16x490-55,845 (மாதாந்தம்)

06/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 02/2025(i) ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை:** தொழில்முறை சோதனை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

## 05. டிரக்டர் இயக்குபவர் (தரம் III)

**தேவையான தகைமைகள்**

(i) க.பொ.த. (சா.தர) பரீட்சையில் குறைந்தது இரு (02) திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் மேலுள்ள பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் தேசிய தொழில் தகைமை (NVQ) 2 அல்லது 3 தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) க.பொ.த. (சா.தர) பரீட்சையில் குறைந்தது இரு (02) திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் குறித்த துறையில் ஓர் (01) ஆண்டு தொழில்துறை தேர்ச்சியுடன் சேவை அனுபவம் இருத்தல்.

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**வேறு:**

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியின் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்த ஒரு பகுதியில் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரரிடம் குறைந்தது மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட G1 பிரிவின் செல்லுபடியான ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

**சம்பள முறை:** U-PL 2 (III) ரூபா 44,575-16x490-52,415 (மாதாந்தம்)

06/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 02/2025(i) ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை:** தொழில்முறை சோதனை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

✳✳அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை 2026.04.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒன்லைன் அமைப்பு ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். ஒன்லைன் ஊடாக விண்ணப்பிப்பதற்கு, விண்ணப்பதாரர்கள் https://uom.lk/vacancies என்ற இணையதளத்திற்கு பிரவேசித்தல் வேண்டும். ஒன்லைன் விண்ணப்ப நடைமுறை 2026.04.05 ஆம் திகதி திறக்கப்படுவதோடு 2026.04.27 ஆம் திகதிக்கு நிறைவடையும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் ஒன்லைன் முறை ஊடாக ஒவ்வொரு பதவிக்காகவும் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து வன் பிரதி ஒன்றை (Hard Copies) தம்மால் உறுதி செய்யப்பட்ட மற்றும் அனைத்து இணைப்புடன் உதவிப் பதிவாளர்/ நிறுவனம் (கல்விசாரா) பிரிவு, மொரட்டுவை பல்கலைக்கழகம், மொரட்டுவை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.04.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

உயர் கல்வி நிறுவனங்களில், அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் சட்டரீதியான சபைகளில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் மேலுள்ளவாறு தரவிறக்கம் செய்த தமது விண்ணப்பத்தை குறித்த திணைக்கள தலைவர் மூலம் அனுப்புவதற்கு வகை செய்தல் வேண்டும்.

மேலுள்ளவாறு குறித்த திணைக்கள தலைவர் மூலம் அனுப்பாத, தாமதித்துக் கிடைக்கின்ற, தேவையான விபரங்கள் தரப்படாத, தெளிவற்ற அல்லது வேறு ஏதேனும் தேவை ஒன்றைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

தேவையான விண்ணப்பங்களை ஒன்லைன் முறை மூலம் அனுப்பும்போது தொழில்நுட்ப சிக்கல்கள் எற்பட்டால் 011-2640511 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும். குறித்த பதவிக்காக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய ஆட்சேர்ப்பு செயற்பாடு மற்றும் தேர்வை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகம் தமது உரிமையை தக்கவைக்கும்.

**பதிவாளர்**
**மொரட்டுவை பல்கலைக்கழகம்,**
**மொரட்டுவை.**

2026.03.31